ஏற்கெனவே சம்பளச் சலுகை இருந்து வருவதன் காரணமாக புத்தகம் வாங்க ரூ. 50 தரப்படுகிறது. சென்ற இரண்டு ஆண்டுக் காலமாக இந்த உதவி அளித்து வரப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரிக்கிறதா ? குறைகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஓரளவு ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. 1969-70-ம் ஆண்டில் 19 ஆயிரம் சில்லறை மாணவர்கள் தமிழைப் பாட மொழியாக எடுத்துப் பயின்றுர்கள். 1970-71-ம் ஆண்டில் இருபதாயிரம் சில்லறை மாணவர்கள் பயின்றுர்கள். 1971-72-ம் ஆண்டில் இருபத்தொரு ஆயிரம் சில்லறை மாணவர்கள் தமிழைப் பாட மொழியாக எடுத்துப் பயின்றிருக்கிறுர்கள். ஆக, ஆண்டுக்காண்டு இதனுடைய எண்ணிக்கை பெருகி வருகிறது.

Institute of Epigraphy

* 203 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up an Institute of Epigraphy in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம்.

பண்டைய எழுத்துக்களையும், கல்வெட்டுகளில் உள்ள எழுத்துக்களையும் படிப்பதற்கும், அவற்றின் அடிப்படையிலே வரலாற்றை அறிவதற்கும் மாணவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கக் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்றை இம்மாநிலத்தில் தொல்பொருள் ஆய்வுத் துறையின்கீழ் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

Thiru N. DENNIS : May I know, Sir, whether any trainee is taken in this State?

1973 நவம்பர் 20]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதற்கான ஓராண்டு கால பயிற்சி தர, 8 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தமிழ், வரலாறு, வடமொழி, இந்தியப் பண்பாடு, தொல்பொருள் ஆகியவற்றில் எம்.ஏ., பட்டம் பெற்ற எட்டு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு உதவித் தொகையாக 125 ரூபாய் ஸ்டைபண்ட் வழங்கப்படுகிறது.

Additions to Madras Museum

* 204 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) the steps taken to procure new additions to the Government Museum at Egmore, Madras during the calendar years 1970, 1971 and 1972; and

(*b*) the cost of the new additions?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1970 முதல் 1972 வரை கலைப்பொருள்கள் புதைபொருள்களிலிருந்தும், அன்பளிப்பாக பெறப்பட்ட வகையிலும், இதர மாநிலங்களிலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் அனுப்பப்பெற்ற பொருள்களைக் கொண்டும் மேலும் ஆங்காங்கு அருங்காட்சியக அலுவலர்கள், பல பொருள்கள் சேகரித்தும் நேரடியாக வாங்கப்பட்டும், அரும்பொருள்காட்சி சாலையில் சேர்க்கப்பட்டன.

(ஆ) புதிய சேர்க்கைக்கான மொத்தச் செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1970–71	ரூ.	பை.
1. புதைபொருள் நாணயங்கள்	1,198	60
2. மற்ற புதை பொருட்கள்	10,212	18
3. விலைக்கு வாங்கப்பட்டவை	317	00
1971–72		
1. புதை பொருள் நாணயங்கள்	1,948	30
2. மற்ற புதை பொருள்கள்	1,931	34
3. விலைக்கு வாங்கப்பட்டவை	4,229	00

THIRU N. DENNIS : May I know the proposals for new additions in 1973?